
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.7.2023) முகாம் அலுவலகத்தில், காவல்துறை தலைமை இயக்குநராக பொறுப்பேற்றுக் கொண்ட சங்கர் ஜிவால், சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.7.2023) முகாம் அலுவலகத்தில், சட்டம் மற்றும் ஒழுங்கு காவல்துறை கூடுதல் இயக்குநராக பொறுப்பேற்றுக் கொண்ட ஆ.அருண், சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.7.2023) முகாம் அலுவலகத்தில், தலைமையக காவல்துறை கூடுதல் இயக்குநராக பொறுப்பேற்றுக் கொண்ட எஸ்.டேவிட்சன் தேவாசிர்வாதம், சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.7.2023) முகாம் அலுவலகத்தில், சென்னை பெருநகர காவல் ஆணையராக பொறுப்பேற்றுக் கொண்ட சந்தீப் ராய் ரத்தோர், சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### தமிழ்நாட்டில் 74,400 கர்ப்பிணி தாய்மார்கள் - குழந்தைகளுக்கு ரூ. 38.20 கோடி மதிப்பீட்டில்

# வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் நிதி உதவி திட்டம்!

## அமைச்சர்கள் ஆர்.காந்தி - மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தனர்!

ராணிப்பேட்டை, ஜூலை 2-

கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி அவர்களும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களும் இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை மற்றும் தமிழ்நாடு திட்டக்குழு இணைந்து செயல்படுத்தும் குழந்தையின் வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் கர்ப்பிணி தாய்மார்களுக்கான கர்ப்ப காலத்தில் வழங்கப்படும் சிறப்பு நிதியுதவித் திட்டத்தினை தமிழ்நாட்டில் முதலாவதாக குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து, 101 கர்ப்பிணி தாய்மார்களுக்கு முதல் தவணையினை வழங்கினார்கள்.

தொடர்ந்து, “பேறுகால மருத்துவ பரிசோதனைகள் பற்றிய சுகாதார செவிலியர்களுக்கான விளக்க பேறுகால சக்கர வியூகம்” மற்றும் குழந்தையின் சீரான வளர்ச்சிக்கான நிதியுதவி திட்டம் பற்றி விளக்க பதாகைகளை வெளியிட்டார்.

தொடர்ந்து, சர்வதேச மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு இராணிப்பேட்டை மாவட்டத்தில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு மலர்மாலை அணிவித்து கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ச.வளர்மதி தலைமை தாங்கினார்.

இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை மரு.செல்வவிநாயகம் திட்ட விளக்கயுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் பேசியதாவது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த சிறப்பான திட்டத்தை தமிழ்நாட்டிலேயே இராணிப்பேட்டை மாவட்டத்தில் துவக்கி வைத்ததற்காக மாவட்டத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மருத்துவத்துறை இந்தியாவிலேயே சிறப்பான முறையில் மக்களுக்கு சேவையை அழித்து வருகிறது. கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஆட்சி பொறுப்பேற்ற முதல் நாளிலிருந்து அதிகரித்து வந்த பெருந்தொற்றை கட்டுப்படுத்திட இரவு பகல் பாராமல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்ததன் விளைவாக ஒரு மாதத்திற்குள் பெருந்தொற்று கட்டுப்படுத்தப்பட்டது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் நடவடிக்கையும் பாராட்டுக்குரியது.

இவ்வாறு ஆர்.காந்தி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேசியதாவது.

வாழ்வின் முதல் 1000 நல்நாட்களுக்கு (கருத்தறித்த நாள் தொடங்கி 2 வயது முடிவடையும் நாள் வரை) (270280 நாட்கள் மகப்பேறு, சிசு பருவம் 365 நாட்கள், குழந்தை பருவம் 365 நாட்கள்) குழந்தைகளையும், தாய்மார்களையும் எவ்வாறு ஆரோக்கியத்துடன் பாதுகாப்பது என்கின்ற திட்டம் தான் வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள்.

இத்திட்டமானது இங்கிருக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு மட்டும் கிடையாது. தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களில் கணக்கிடப்பட்டு 14 மாவட்டங்களில் நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு, இரத்தசோகை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணி தாய்மார்கள் உள்ள 23 வட்டாரங்களில் உள்ள 118 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு வருடத்தில் 37 ஆயிரத்து 200 குழந்தைகள் பிறக்கின்றார்கள். இரண்டு வருடங்களுக்கு பார்க்கும்போது 74 ஆயிரத்து 400 குழந்தைகள். இக்குழந்தைகளுக்கு மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் ஊட்டச்சத்திற்காக கர்ப்பிணி தாய்மார்கள் கர்ப்பம் தரித்த உடன் முதல்தவணை (1820வது வாரம்) ரூ.1000 , இரண்டாம் தவணை (26 28வது வாரம்) ரூ.1000, மூன்றாம் தவணை (37 38வது வாரம்) ரூ.1000, 6வது மாதம் - 4ஆம் தவணை ரூ.500, 12வது மாதம் 5ஆம் தவணை ரூ.500, 18வது மாதம் 6ஆம் தவணை ரூ.500, 24வது மாதம் - 7ஆம் தவணை ரூ.500 என மொத்தமாக கர்ப்ப காலத்தில் ரூ. 3000/, 2 வயது வரை குழந்தை வளரும் பருவத்தில் ரூ.2000/ என மொத்தமாக ரூ.5,000/ வழங்கப்படவுள்ளது. இந்த தொகை முதல் குழந்தைக்கு, இரண்டாவது குழந்தைக்கு வழங்கப்படுவது குறித்து கட்டுப்பாடு ஏதும் இல்லை.

குழந்தை இறப்பு விகிதம் இந்தியாவில் ஆயிரத்திற்கு 28, தமிழ்நாடு அளவில் ஆயிரத்திற்கு13, மகப்பேறு இறப்பு விகிதம் இந்திய அளவில் ஒரு இலட்சத்திற்கு 97, தமிழ்நாடு அளவில் ஒரு இலட்சத்திற்கு 54 என்ற விகிதத்தில் உள்ளது. இதனை மேலும் குறைத்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தினை கொண்டு வந்துள்ளார்கள். இதற்காக ரூ.38.20 கோடி ஒதுக்கியுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் வருமுன் காப்போம், மக்களைத் தேடி மருத்துவம், இதயம் காப்போம், இன்னுயிர் காப்போம் போன்ற திட்டங்களை போன்று வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் என்ற திட்டமும் வாழ்நாளில் ஒரு பயனுள்ள திட்டமாக அமையப்போகிறது. சர்வதேச மருத்துவர்கள் தினமான இன்று வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் திட்டத்தினை திமிரி வட்டாரத்தில் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆகவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் எந்த நோக்கத்திற்காக இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார்களோ அதனை நிறைவேற்றும் வகையில் தாய்மார்கள் இந்த நிதியுதவியினை உரிய முறையில் பயன்படுத்தி ஆரோக்கியமான குழந்தைகளை பெற்றெடுத்து பயனடைய வேண்டுமென என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேசினார்.

இறுதியாக இன்று தொடங்கப்பட்ட வாழ்வின் முதல் 1000 நல்நாட்கள் திட்டம் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் செய்தியாளர்களுக்கு விவரித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், இணை இயக்குநர் மகப்பேரு மற்றும் குழந்தைகள் நலம் மரு.நிர்மல்சன், துணை இயக்குநர் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை மரு. மணிமாறன், UNICEF மாநில திட்ட அலுவலர் மரு. கௌஷிக் கங்குலி, ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் ரமேஷ், பேருராட்சி தலைவர் திருமதி.மாலா இளஞ்செழியன், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### அடிப்படை விதி கூட தெரியவில்லையா என நாடு முழுதும் எழும் கேள்வி!

# பூச்சாண்டித்தனத்தை ஆளுநர் நிறுத்திக்கொள்வது நல்லது!

சென்னை, ஜூலை 2-

அமைச்சர் செந்தில் பாலாஜி பதவி நீக்கம் விவகாரத்தில் அடிப்படை விதி கூட ஆளுநருக்கு தெரியவில்லையா என நாடு முழுதும் கேள்வி எழுந்துள்ளது. பூச்சாண்டித் தனத்தை ஆளுநர் நிறுத்திக்கொள்வது அவருக்கு நல்லது என்று தினகரன் நாளேடு தலை யங்கத்தில் விமர்சித்துள்ளது.

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!


தினகரன்

ஜூலை 1, 2023 சனிக்கிழமை

பூச்சாண்டித்தனம்

ஒன்றிய அரசின், சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்டத்தின்கீழ், அமைச்சர் செந்தில் பாலாஜியை, ஒன்றிய அமலாக்கத்துறை அதிகாரிகள் கடந்த ஜூன் 14ம் தேதி கைது செய்தனர். அதிகாரிகளின் சித்ரவதைக்கு ஆளான அமைச்சர் செந்தில்பாலாஜி, இதய நோயால் பாதிக்கப்பட்டார். நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து, சென்னை காவேரி மருத்துவமனையில் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, தொடர் மருத்துவ கண் காணிப்பில் உள்ளார்.

இந்நிலையில், செந்தில்பாலாஜியை அமைச்சர்

இதுகுறித்து 1.7.2023 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

ஒன்றிய அரசின், சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்டத்தின்கீழ், அமைச்சர் செந்தில் பாலாஜியை, ஒன்றிய அமலாக்கத்துறை அதிகாரிகள் கடந்த ஜூன் 14ம் தேதி கைது செய்தனர். அதிகாரிகளின் சித்ரவதைக்கு ஆளான அமைச்சர் செந்தில்பாலாஜி, இதய நோயால் பாதிக்கப்பட்டார். நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து, சென்னை காவேரி மருத்துவமனையில் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, தொடர் மருத்துவ கண்காணிப்பில் உள்ளார். இந்நிலையில், செந்தில்பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து ஆளுநர் நேற்று முன்தினம் மாலை நீக்கி யுள்ளதாக தமிழ்நாடு ஆளுநர் மாளிகை தரப்பில் இருந்து அறிவிப்பு வெளியானது.

ஆளுநரின் இந்த நடவடிக்கைக்கு, தமிழகம் மட்டுமின்றி, நாடு முழுவதும் இருந்து பலத்த எதிர்ப்பு கிளம்பியது. அடுத்த சில மணி நேரத்தில் ஆளுநர் தனது உத்தரவை திரும்ப பெற்றார். ஆளுநரின் இந்த செயல்பாடு, தமிழக அரசியல் களத்தில் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறது. மாநிலங்களை பொறுத்தவரை, அரசியல் சாசனத்தின் காவலர் ஆளுநர் தான். ஆனால், அவரே அரசியல் சாசனத்தை மீறக்கூடாது. இது, மிக மிக மோசமான முன்னுதாரணம். ஆளுநர் தடுமாறியது, சில மணி நேரம் கழித்து அவருக்கே தெரியவந்துள்ளது. அதன்பிறகே, தனது உத்தரவை வாபஸ் பெற்றுள்ளார். ஆளுநருக்கு எந்த இடத்திலும் தனிப்பட்ட முறையில் செயலாற்ற உரிமை இல்லை.

அவர், எதை செய்தாலும் முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில்தான் செய்ய வேண்டும் என, இந்திய அரசியலமைப்பு சட்டம் இயற்றிய மாமேதை டாக்டர் அம்பேத்கர் தெளிவுபட கூறியுள்ளார். இதுகூடவா ஆளுநருக்கு தெரியாது என்ற விமர்சனம் வீதிக்கு வீதி ஒலிக்கிறது. தனது உத்தரவால் எதுவும் நடக்கபோவதில்லை என்பதும், தனக்கு அந்த அதிகாரம் இல்லை என்பதும் ஆளுநருக்கு நன்றாகவே தெரியும். தன்னுடைய இருப்பை எப்போதும் காண்பித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்று ஆளுநர் ஆர்.என்.ரவி விளம்பர பிரியராகவே இந்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

தனக்கான பொறுப்பையும், அரசியலமைப்பு சட்டத்தையும் அவர் மதித்து செயல்படவில்லை என்ற ஏவுகணைகளும் ஆளுநரை நோக்கி பாய்ந்தவண்ணம் உள்ளன. தனக்கு இல்லாத அதிகாரங்களை, இருப்பதாக நினைத்துக்கொண்டு தேவையில்லாத சர்ச்சைகளை ஆளுநர் உருவாக்கி வருகிறார். தமிழக சட்டமன்றத்தில் மாநில அரசால், ஜனநாயக ரீதியாக இயற்றப்படும் மசோதாக்களை நிறுத்திவைப்பது, தமிழ்நாடுதமிழகம் என்ற சர்ச்சையை ஏற்படுத்துவது, அரசியல் சாசன சட்டத்தை மீறி மாநில அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுப்பது என தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, மாநில அரசுடன் மோதல் போக்கை கடைபிடித்து வருவது, ஜனநாயக மாண்புக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.


ஆளுநரின் இந்த செயல்பாடு, கேலிக்கும், கிண்டலுக்கும் உள்ளாக்கப்பட்டு வருவது, வேதனையிலும் வேதனை. ஜனநாயகத்தின் எல்லை எது, அரசியல் சாசன சட்டம் என்ன சொல்கிறது என்ன அடிப்படை விதிகூட ஆளுநருக்கு தெரியவில்லையா... என்ற கேள்வி நாடு முழுவதும் எழுந்துள்ளது. ஆளுநர், தனது பூச்சாண்டித்த னத்தை இத்தோடு நிறுத்திக் கொள்வது அவருக்கு நல்லது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறியுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் கோவிந்தன்

### ஜூலை 2 (1991)



1937ஆம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தலைவர் கலைஞரின் உற்ற தோழனாக இருந்து இளமை மிடுக்கு மாறாமல், கழக அடலேறென அயர்வின்றி பணியாற்றியவர்.

1958ல் திருவத்திபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் 1962லிருந்து தொடர்ந்து பத்தாண்டுகள் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், 1967ல் சட்டப்பேரவையின் துணைத் தலைவராகவும், 1969 பிப்ரவரி முதல் பேரவையின் தலைவராகவும் பொறுப்பேற்று மாற்றுக் கருத்துக் கொண்டோரும் போற்றும் வகையில் திறம்பட பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணாவிடம் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும் விழாவில் இவருக்கு “அண்ணா விருது” வழங்கி சிறப்பித்தார்.

“கழகத்தையும் பொதுப்பணியையும் இரு கண்களாகக் கொண்டு செயலாற்றிய அந்தச் செந்தமிழ் அறிஞரின் புகழ் என்றும் நிலைக்கும்!” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

## ரிசர்வ் வங்கியின் முன்னாள் தலைவர் ரகுராம் ராஜன் எழுதுகிறார்...



**இன்றைய இந்தியா ஒரு குரங்கு கையில் கிடைத்த பூமாலை என்று!**

**நான் என் நாட்டை நேசிக்கும் ஒரு சாதாரண குடிமகன் மட்டுமே!**

**நான் காங்கிரஸ்காரனோ, கம்யூனிஸ்டோ அல்லது மோடியின் பக்தனோ இல்லை.**

கடந்த 70 ஆண்டுகளில் ஜாதி மத பேத மற்ற இந்தியாவாக மிகவும் முன்னேறியுள்ளது.

இவருக்கு முன்னாள் இந்தியாவை ஆண்டு வந்த அனைத்து பிரதமர்களும் மோடிஜியை விடவும் கல்வியாளர்களே! மேலும் தேசபக்தியாளர்களே!

அவர்கள் இரவு பகலாக உழைத்துள்ளனர். அதன் விளைவுதான் இன்று இந்தியா உலகில் வல்லரசு.

மோடிஜி பிறப்பதற்கு முன்பே, பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

மோடிஜி பேசத் தொடங்கும் முன்பே, உலகிலேயே சிறந்த அரசியல் சாசனம் இந்தியாவிடம் இருந்தது.

மோடிஜி தவழ்ந்து விளையாடும் போதே, இந்தியா பக்ராநங்கல் கால்வாயைக் கட்டியிருந்தது.

பள்ளிக்கூடத்தில் மோடிஜி புத்தகத்தைப் புரட்டி விளையாடும் போதே இந்தியா அணு ஆராய்ச்சி மையத்தைத் திறந்து வைத்துவிட்டது.

மோடிஜி விளக்கு ஏற்றுவது எப்படி என்று கற்றுக்கொண்டிருந்த போதே தாராபூர் அணுமின் நிலையத்தை இந்தியா ஆரம்பித்திருந்தது.

மோடிஜி ஆடை உடுக்கும் முன்பே. இந்தியாவில் துணி நெசவு செய்யத் தொடங்கி விட்டனர்.

AIIMS, IIT & IIM மற்றும் பல பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் தொடங்கப்பட்டிருந்தன.

ராஜ்தானி எக்ஸ்பிரஸ் போன்ற ரயில்கள் வேகமாக ஓடும் போது மோடிஜி டீ விற்றுக் கொண்டிருந்தார்.

இத்தனை நன்மைகளும் முன்பே நிகழ்ந்திருந்தது!

**நம்முள் இன்னும் சிலர் நம்புகிறார்கள் அல்லது நம்ப வைக்கப் படுகிறார்கள் எல்லாம் மோடிஜியின் ஆளுமையால் நடந்தேறியது போல!**

**உண்மையில் மோடிஜி இந்தியாவை எட்டு ஆண்டுகளில்; நாற்பது ஆண்டுகள் பின்னோக்கி அழைத்துச் சென்று விட்டார்.**

**ஜாதியற்ற, மதநல்லிணக்க இந்தியாவை உருவாக்க கைகோர்த்து நின்றவர்களின் வரிசையில், அதற்கு எதிரான சித்தாந்தத்தை கொண்டராகவே உள்ளார் மோடிஜி.**

வருங்கால இந்தியாவில் நம் குழந்தைகள் ஒருவருக்கொருவர் சண்டையிடாமல் நல்லுறவோடு வாழ்ந்து வளமான பொருளாதார சமத்துவமிக்க நாடாக அமையட்டும்.

## ‘வாட்ஸ் அப்’ பில் வலம் வந்தது!

